11805



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**80 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය **I, II**
தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் **I, II**
Information & Communication Technology **I, II**

## தகவல், தொடர்பாடல் தொழினுட்பவியல் II

※ **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
※ முதலாம் வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் ஆகிய இரண்டினதும் முகாமைக்குக் கற்றல் முகாமைத்துவ முறைமைகளைப் (LMS) பயன்படுத்துதல் ஒரு பொது நடைமுறையாக இருந்து வருகின்றது. ஒரு கற்றல் முகாமைத்துவ முறைமையினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் **இரு** வசதிகளை எழுதுக.

(ii) பின்வரும் இரு பூரணமற்ற கூற்றுகளைக் கருதுக:

(a) மேசைக் கணினிகளின் முதன்மைத் தேக்ககச் சாதனம் ..............Ⓐ.............. ஆகும்.

(b) ஒரு பணிசெயல் முறைமையானது ..............Ⓑ.............. இற்கு ஓர் உதாரணமாகும்.


கீழே தரப்பட்டுள்ள பதங்களின் பட்டியலிலிருந்து Ⓐ , Ⓑ என்னும் முகப்படையாளங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான பதத்தை இனங்காண்க. முகப்படையாளத்தையும் பொருத்தமான பதத்தையும் **முகப்படையாளம் ⟶ பதம்** என்னும் வடிவத்தில் எழுதுக.

**பதப் பட்டியல் :** {வன்வட்டு (*Hard disk*), முறைமை மென்பொருள் (*Systems software*), பிரயோக மென்பொருள் (*Application software*), *RAM*}


(iii) (a) எண்ம எண் $867_8$ ஐ அதன் இருமச் சமவலுவாக மாற்றுக. உமது கணித்தலின் முக்கிய படிமுறைகளைக் காட்டுக.

(b) $1011010_2$ ஆனது ASCII குறிமுறையில் வரியுரு 'Z' ஐக் குறிக்குமாயின், வரியுரு 'X' இற்குரிய ASCII குறிமுறை யாது?


(iv) கீழே தரப்பட்டுள்ள தருக்கச் சுற்றுக்குரிய மெய்நிலை அட்டவணையை வரைக.




(v) (a) பின்வரும் இரு வரிப்படங்களும் இரு கோப்பு அணுகல் முறைகளை (accessing methods) விளக்குகின்றன. **A, B** ஆகியவற்றினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் கோப்பு அணுகல் முறைகளை எழுதுக.




**A**




**B**

(b) பணிசெயல் முறைமையானது கோப்பு நீட்டிப்புகளைப் (file extensions) பயன்படுத்தி கோப்பு வகைகளை (file types) இனங்காண்கின்றது. ஒரு *Powerpoint* கோப்பின் கோப்பு நீட்டிப்பு யாது?

[பக். 8 ஐப் பார்க்க

SNA Education Campus

Scanned by CamScanner

(vi) ஒரு சொல் முறைவழிப்படுத்தப்பட்ட பாட (text) ஆவணத்தின் துண்டமானது மேற்கொள்ளப்பட்ட சில வடிவமைப்புகளுடன் (formatting) கீழே காட்டப்பட்டுள்ளது.

> ❶ உம் ❷ உம் ⟶ **Mahaweli River** ❸
>
> The Mahaweli River is a 335 km long river, ranked as the longest river in Sri Lanka. It has a drainage basin of 10,448 km$^2$ which is the largest in the country, which covers almost one-fifth of the total area of the island.
>
> Source : <u>https://en.wikipedia.org/wiki/Mahaweli_River</u> ⟵ ❹

பின்வருவன ஒரு சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளில் உள்ள சில வடிவமைப்புக் கருவிகளின் படவுருக்கள் ஆகும்.

| வடிவமைப்புக் கருவியின் படவுரு | **B** | abc✓ |  |  | U | $X^2$ |  |
|---|---|---|---|---|---|---|---|
| படவுரு முகப்படையாளம் | Ⓟ | Ⓠ | Ⓡ | Ⓢ | Ⓣ | Ⓤ | Ⓥ |

❶ – ❹ என்னும் முகப்படையாளங்களினால் காட்டப்பட்டுள்ள வடிவமைப்புப் பணிகளைச் செய்வதற்குத் தேவைப்படும் Ⓟ – Ⓥ என்னும் முகப்படையாளங்களினால் காட்டப்பட்டுள்ள வடிவமைப்புக் கருவிகளின் படவுருக்களை இனங்காண்க. ஒவ்வொரு வடிவமைப்புப் பணியினதும் ❶ – ❹ முகப்படையாளத்தையும் அதற்குப் பொருத்தமான வடிவமைப்புக் கருவியின் படவுருவின் முகப்படையாளத்தையும் எழுதுக.

(vii) கொள்வனவுத் திகதியையும் (PurchaseDate) வெவ்வேறு வழங்குநர்களினால் (Suppliers) கொள்வனவு செய்யப்பட்ட வெவ்வேறு உருப்படிகளின் (items) கணியங்களையும் (quantities) பட்டியற்படுத்தும் பகுதியளவாகக் காட்டப்பட்ட Purchase தரவுத்தள அட்டவணையைக் கருதுக.

(SupplierID ← வழங்குநரின் அடையாள எண்; ItemID ← உருப்படியின் அடையாள எண்; PurchaseDate ← கொள்வனவு செய்யப்பட்ட திகதி; Quantity ← கொள்வனவு செய்யப்பட்ட உருப்படிகளின் எண்ணிக்கை)

| SupplierID | ItemID | PurchaseDate | Quantity |
|---|---|---|---|
| S001 | 1001 | 02/05/2020 | 30 |
| S002 | 1002 | 05/03/2020 | 40 |
| S003 | 1005 | 25/11/2020 | 25 |
| S002 | 1007 | 05/03/2020 | 20 |
| S004 | 1001 | 12/04/2020 | 45 |

4/4 (a) மேலுள்ள அட்டவணையில் உள்ள புலங்களினதும் பதிவுகளினதும் எண்ணிக்கையை எழுதுக.

(b) PurchaseDate மற்றும் Quantity க்கு மிகவும் பொருத்தமான தரவு வகைகளை (data types) எழுதுக.

(viii) Ⓐ முதல் Ⓒ வரை முகப்படையாளமிடப்பட்ட வெற்றிடங்களைக் கொண்ட பின்வரும் போலிக்குறிமுறைத் துண்டத்தைக் கருதுக:

இந்தப் போலிக்குறிமுறைத் துண்டமானது 0 முதல் 10 வரையான ஒற்றை எண்களின் கூட்டுத்தொகையைக் கணிப்பிட்டுக் காட்சிப்படுத்தும். Ⓐ, Ⓑ மற்றும் Ⓒ க்குத் தகுந்த கோவைகளை **முகப்படையாளம் ⟶ கோவை** எனும் வடிவத்தில் எழுதுக.


```
BEGIN
    sum = 0
    num = 1
    WHILE [ Ⓐ ]
        sum = [ Ⓑ ]
        num = [ Ⓒ ]
    ENDWHILE
    DISPLAY sum
END
```

[பக். 9 ஐப் பார்க்க

SNA Education Campus

Scanned by CamScanner

(ix) GIMP மென்பொருளின் வடிவமைப்புக் கருவிகள் சிலவற்றைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| வடிவமைப்புக் கருவியின் படவுரு |  |  |  |  |
|---|---|---|---|---|
| படவுருவின் எண் | ❶ | ❷ | ❸ | ❹ |

❶ – ❹ என்னும் படவுருக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய தகுந்த விவரணத்தைக் கீழே தரப்பட்டுள்ள Ⓐ – Ⓓ என்னும் முகப்படையாளமிடப்பட்ட **விவரணப் பட்டியலிலிருந்து** இனங்காண்க. மேலேயுள்ள அட்டவணையில் உள்ள ஒவ்வொரு படவுரு எண்ணையும் அதற்குப் பொருந்தும் விவரண முகப்படையாளத்தையும் **படவுரு எண் ⟶ விவரண முகப்படையாளம்** எனும் வடிவத்தில் எழுதுக.

**விவரணப் பட்டியல் :** {Ⓐ – சுட்டியின் உதவியுடன் படிமத்தின் தேவையான பகுதியைத் தேவையான வடிவிலே தெரிதல்

Ⓑ – தேவையான பகுதியை வட்டம் அல்லது நீள்வட்ட வடிவிலே தெரிதல்

Ⓒ – தெரிவு செய்யவேண்டிய பகுதியைச் சுற்றி தெரிதல்

Ⓓ – தெரிவு செய்த பகுதிக்கு வர்ணம் இடலும் தெரிவுசெய்த அளவிற்கேற்ப கோடு வரைதலும்}

(x) (a) திணைக்களமொன்று கணினி இடத்துரிப் பரப்பு வலையமைப்பு (LAN) ஒன்றைக் கொண்டிருப்பதன் அனுகூலங்கள் **இரண்டைப்** பட்டியலிடுக.

(b) புவியியல் சார்ந்து விரவல்படுத்தப்பட்டமைக்கு அமைய **இரண்டு** கணினி வலையமைப்பு வகைகளின் பெயர்களை எழுதுக.

**2.** (i) கீழேயுள்ள (Ⓐ – Ⓓ என முகப்படையாளமிடப்பட்டுள்ள) முறைகேடுகள் ஒவ்வொன்றுக்கும் உரிய பதத்தைப் **பதப் பட்டியலிலிருந்து** இனங்கண்டு அப்பதத்தை ஒவ்வோர் உரிய முகப்படையாளத்திற்கும் எதிரே **முகப்படையாளம் ⟶ பதம்** என்னும் வடிவத்தில் எழுதுக.

| முகப்படையாளம் | முறைகேடு |
|---|---|
| Ⓐ | கணினிகளில் தேக்கி வைக்கப்பட்ட முக்கிய தரவுகளையும் தகவல்களையும் உரிமையாளருக்குத் தெரியாமல் திருடுதல் |
| Ⓑ | இணையத்திலிருந்து ஒரு பந்தியை பிரதிசெய்தலும் (copy) அதனை எடுத்துக் காட்டாமல் ஓர் ஆவணத்தில் ஒட்டுதலும் (paste) |
| Ⓒ | ஓர் ஊழியர் ஒரு நிதி அனுகூலத்தைப் பெறுவதற்காக வேறொருவரின் ஆளடையாளத்தைப் பயன்படுத்தல் |
| Ⓓ | வேறொருவரின் புத்தாக்கத்தினை அவரிற்குத் தெரியாமல் வேறு விருத்திகளுக்குப் பயன்படுத்துதல் |

**பதப் பட்டியல் :** {ஆளடையாளத் திருட்டு (identity theft), புலமைச் சொத்து உரிமையை மீறுதல், எழுத்துத் திருட்டு (plagiarism), தரவுத் திருட்டு, களவு (piracy), விரும்பா அஞ்சல் (spam)}

(ii) பின்வரும் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளவரின் கொண்ணிலை காரணமாக ஏற்படக் கூடிய உடல் நலத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் **நான்கை** எழுதுக.



[பக். 10 ஐப் பார்க்க

SNA Education Campus

Scanned by CamScanner

(iii) Ⓐ, Ⓑ, Ⓒ, Ⓓ, Ⓔ என முகப்படையாளமிடப்பட்ட வெற்றிடங்களைக் கொண்ட பின்வரும் கூற்றுகளைக் கருதுக. ஒவ்வொரு கூற்றிலுமுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு உகந்த மிகப் பொருத்தமான பதத்தைக் கீழே தரப்பட்டுள்ள **பதப் பட்டியலிலிருந்து** இனங்காண்க. உரிய பதத்தை ஒவ்வொரு முகப்படையாளத்திற்கும் எதிரே **முகப்படையாளம் → பதம்** என்னும் வடிவத்தில் எழுதுக.

(a) ஒரு தனித்துநில் கணினியினுள்ளான அதிகாரம்பெறாத பிரவேசத்தைத் தடுப்பதன் மூலம் ஒரு கணினியில் தேக்கி வைக்கப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்கு ……………Ⓐ…………… பயன்படுத்தப்படுகின்றது.

(b) ஒரு கணினி தொழிற்படத் தவறும்போது முக்கிய தரவுகளைப் பாதுகாப்பதற்கு (safeguard) ……………Ⓑ…………… அத்தியாவசியமானது.

(c) இலத்திரனியல் வங்கிக் கணக்குகளின் பயனர் பெயர்களையும் கடவுச் சொற்களையும் சேகரிப்பதற்குப் பயனர்களை ஏமாற்றும் செயல்……………Ⓒ…………… ஆகும்.

(d) ஒரு கணினி முறைமையைத் தீங்குபயக்கும் மென்பொருளிலிருந்து பாதுகாப்பதற்கு ……………Ⓓ…………… ஐப் பயன்படுத்தலாம்.

(e) ……………Ⓔ…………… ஆனது கணினியில் ஒரு நிறைவேற்றத்தக்க கோப்பாகப் புகுந்து கோப்புகளை அழிக்க முடியும்.

**பதப் பட்டியல் :** {காப்பு (backup), நச்சுநிரல் காவல் (virus guard), தீச்சுவர் (firewall), விவரத் திருட்டு (phishing), கடவுச்சொல் (password), நச்சுநிரல் (virus), விரும்பா அஞ்சலிடல் (spamming)}

(iv) பின்வரும் அட்டவணை நான்கு முகப்படையாளங்களையும் கணினி வலையமைப்பாக்கத்துடன் தொடர்புபட்ட விவரணங்களையும் பட்டியலிடுகிறது.

| முகப்படையாளம் | விவரணம் |
|---|---|
| Ⓐ | இணையத்திற்கும் ஒரு தரப்பட்ட வலையமைப்பிற்குமிடையே ஒரு பாதுகாப்பான தடுப்பாகத் தொழிற்படுகிறது. |
| Ⓑ | ஒரு வழிப்படுத்தப்பட்ட ஊடுகடத்தல் ஊடகத்திற்கு உதாரணமாகும். |
| Ⓒ | இரு வெவ்வேறு வலையமைப்புகளைத் தொடுக்கிறது. |
| Ⓓ | தொலைபேசி உரையாடலில் பயன்படுத்தப்படும் தொடர்பாடற் பாங்கு ஆகும். |

கீழே தரப்பட்டுள்ள **பதப் பட்டியலிலிருந்து** மிகவும் உகந்த பதத்தைப் பொருத்தமாக்கி, உரிய பதத்தை ஒவ்வொரு முகப்படையாளத்திற்கும் எதிரே **முகப்படையாளம் → பதம்** என்னும் வடிவத்தில் எழுதுக.

**பதப் பட்டியல் :** {முறுக்கிய கம்பிச் சோடி, முழு இருவழிப் போக்கு, அரை இருவழிப்போக்கு, நுழைவாயில் (gateway), தீச்சுவர், Wi-Fi, DNS சேவையகம்}

SNA Education Campus

[பக். 11 ஐப் பார்க்க

Scanned by CamScanner

**3.** ஒரு பல்கலைக்கழகத்தில் மேற்பார்வையாளர்கள் (Supervisors), செயற்றிட்டம் (Project) மற்றும் அம்மேற்பார்வையாளர்களினால் மேற்பார்வை செய்யப்படும் செயற்றிட்டங்கள் (Supervisor_Project) என்பன பற்றிய தகவல்களைத் தேக்கி (store) வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பகுதியளவாகக் காட்டப்பட்டுள்ள தொடர்புடைமைத் (relational) தரவுத்தள அட்டவணைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**மேற்பார்வையாளர் (Supervisor) அட்டவணை**

| SupervisorID | FirstName | LastName | DepartmentName |
|---|---|---|---|
| S01 | Anil | Priyantha | Computer Science |
| S02 | Mohamed | Nazwar | Chemistry |
| S03 | Raj | Selvam | Physics |
| S04 | Anura | Wijenayake | Computer Science |
| S05 | Keerthi | Nanayakkara | Mathematics |
| : | | | Chemistry |

**செயற்றிட்ட (Project) அட்டவணை**

| ProjectID | StartDate |
|---|---|
| P001 | 05/03/2019 |
| P002 | 05/03/2019 |
| P003 | 05/03/2019 |
| P004 | 05/03/2018 |
| P005 | 10/04/2020 |
| P006 : | 15.9.2020 |

**மேற்பார்வையாளர்_செயற்றிட்ட (Supervisor_Project) அட்டவணை**

| SupervisorID | ProjectID | Allowance |
|---|---|---|
| S01 | P003 | 20,000 |
| S02 | P002 | 10,000 |
| S02 | P001 | 15,000 |
| S04 | P001 | 10,000 |
| S03 | P004 | 12,000 |

(i) பின்வரும் கூற்றுகள் **உண்மையானவையா, பொய்யானவையா** எனக் கூறுக.

(a) **SupervisorID** ஆனது **Supervisor_Project** அட்டவணையின் ஓர் அந்நியச் சாவியாகும்.

(b) **ProjectID** ஆனது **Supervisor_Project** அட்டவணையின் ஒரு முதன்மைச் சாவியாகும்.

(ii) பின்வரும் மாற்றங்களுக்கு இடமளிப்பதற்கு இற்றைப்படுத்த வேண்டிய அட்டவணை / அட்டவணைகள் யாது / யாவை?

(a) *Anura Wijenayake* இற்கு 10,000 கொடுப்பனவுடன் (allowance) செயற்றிட்டம் P002 இற்குரிய மேற்பார்வையாளர் பணி குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

(b) *Pradeep Dissanayake* (**SupervisorID** : S06) என்ற பெயருடைய ஒரு புதிய மேற்பார்வையாளராக இரசாயனவியல் (Chemistry) திணைக்களத்தில் சேர்ந்தார். அவருக்கு 15,000 கொடுப்பனவுடன் செயற்றிட்டத்திற்குரிய (**ProjectID**: P003) மேற்பார்வையாளர் பணி குறித்தொதுக்கப்பட்டது.

(iii) 15/09/2020 அன்று பல்கலைக்கழகம், *Mohamed Nazwar, Raj Selvam* ஆகியோரை மேற்பார்வையாளர்களாகக் கொண்டு, ஒரு புதிய செயற்றிட்டத்தை (**ProjectID**: P006) ஆரம்பித்தது. ஒவ்வொரு மேற்பார்வையாளருக்கும் 11,000 கொடுப்பனவாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்குறித்த மாற்றத்திற்காக உரிய அட்டவணையுடன் / அட்டவணைகளுடன் சேர்க்கப்பட வேண்டிய புதிய பதிவை / பதிவுகளை எழுதுக. ஒவ்வொரு பதிவுக்கும் அட்டவணையின் பெயர் ⟶ (புலம்1, புலம் 2, ...) என்னும் வடிவமைப்பைப் பயன்படுத்துக.

(iv) செயற்றிட்டம் P001 ஐ மேற்பார்வை செய்யும் மேற்பார்வையாளரின் / மேற்பார்வையாளர்களின் திணைக்களத்தின் / திணைக்களங்களின் பெயரை (Department Name)/ பெயர்களை தேடுவதற்குரிய ஒரு வினவலை (query) எழுதுவதற்கு இணைக்கப்பட வேண்டிய மிகப் பொருத்தமான அட்டவணைகள் யாவை?

SNA Education Campus

[பக். 12 ஐப் பார்க்க

Scanned by CamScanner

**4.** (i) ஒரு நிறுவகத்திற்கு முகில் கணியாக்கத்தின் (cloud computing) ஒரு சேவையாகிய SaaS (மென்பொருள் ஒரு சேவையாக - Software as a Service) ஐப் பயன்படுத்துவதன் **இரு** அனுகூலங்களை எழுதுக.

(ii) Ⓟ முதல் Ⓢ வரை முகப்படையாளமிடப்பட்ட விவரணங்களுக்கு கீழே தரப்பட்டுள்ள பதப் பட்டியலிலிருந்து சரியான பதங்களைத் தெரிந்தெடுத்து பொருத்துக. உரிய பதத்தை முகப்படையாளத்திற்கு எதிரே **முகப்படையாளம் → பதம்** எனும் வடிவத்தில் எழுதுக.

| முகப்படையாளம் | விவரணம் |
|---|---|
| Ⓟ | இணையத்தில் உள்ள ஒரு கணினியைத் தனித்துவமாக இனங்காணுகிறது. |
| Ⓠ | ஒரு வலைப்பக்கத்தை வேறொரு வலைப்பக்கத்துடன் இணைக்கிறது. |
| Ⓡ | ஒரு ஆள்களப் பெயரை ஒரு IP முகவரியாக மாற்றுகிறது. |
| Ⓢ | வலைச் சேவையகத்திற்கும் வலைமேலோடிக்கும் இடையேயான தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. |

**பதப் பட்டியல் :** {FTP, IP முகவரி, பக்கவிணைப்பு (Pagelink), SMTP, DNS, URL, HTTP, மீயிணைப்பு (Hyperlink)}

(iii) **உரு 1** இற் காட்டப்பட்டுள்ள வலைப் பக்கத்தின் HTML ஆதாரமூலம் (source) ஆனது ❶ தொடக்கம் ❿ வரைக்கும் முகப்படையாளமிடப்பட்ட சில தவறியுள்ள ஒட்டுகளுடன் (tags) **உரு 2** இல் தரப்பட்டுள்ளது. முகப்படையாளத்தின் எண்ணையும் கீழே தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட நேரொத்த HTML ஒட்டையும் நீர் எழுதுதல் வேண்டும்.

**பட்டியல் :** {*h6, h1, alt, title, br, tr, i, td, p, type, rowspan, colspan, th, a, u*}

# COVID-19 pandemic

STOP
COVID-19

COVID-19 pandemic, also known as the coronavirus pandemic, is an ongoing pandemic of coronavirus disease caused by SARS-CoV-2 virus. It was first identified in December 2019 in Wuhan, China. The World Health Organization declared the outbreak a Public Health Emergency of International Concern in January 2020 and a pandemic in March 2020.

*On average, it takes 5-6 days when someone is infected with the virus for symptoms to show; however, it can take up to 14 days.*

| Most common symptoms | Less common and Serious symtoms |
|---|---|
| • fever<br>• dry cough<br>• tiredness<br>• aches and pains<br>• sore throat<br>• headache | ▪ diarrhoea<br>▪ loss of taste or smell<br>▪ a rash on skin, or discolouration of fingers or toes<br>▪ difficulty breathing or shortness of breath<br>▪ chest pain or pressure<br>▪ loss of speech or movement |
| **Six main recommended preventive measures**<br>1. include social distancing<br>2. wearing face masks in public<br>3. hand washing<br>4. covering one's mouth when sneezing or coughing<br>5. disinfecting surfaces<br>6. monitoring and self-isolation for people exposed or symptomatic | |

**For more information: Covid Prevention Task Force**

**உரு 1:** வலைப்பக்கம்

SNA Education Campus

[பக். 13 ஐப் பார்க்க

Scanned by CamScanner

```
html>
<head> <❶> COVID-19 pandemic</❶> </head>
<body>
<❷><center>COVID-19 pandemic</center></❷>
<center>< img src="covid19.png" width="130" height="100" ❸="Mosquito Photo"></center>

<p>COVID-19 pandemic, also known as the coronavirus pandemic, is an ongoing pandemic of
    coronavirus disease caused by SARS-CoV-2 virus. It was first identified in December 2019 in
    Wuhan, China. The World Health Organization declared the outbreak a Public Health Emergency
    of International Concern in January 2020 and a pandemic in March 2020. </p> <❹/>
<p ><❺>On average it takes 5–6 days when someone is infected with the virus for symptoms to
    show, however it can take up to 14 days.</❺></p>

<table border="4" align = "center">
<tr><th>Most common symptoms</th><th> Less common and Serious symtoms</th></tr>
<❻><❼>
    <ul>
      <li> fever</li>
      <li> dry cough</li>
      <li> tiredness</li>
      <li> aches and pains</li>
      <li> sore throat</li>
        <li>headache </li>
    </ul>
</❼>
<❼>
    <ul ❽="Square">
          <li> diarrhoea</li>
          <li> loss of taste or smell</li>
          <li> a rash on skin, or discolouration of fingers or toes</li>
          <li> difficulty breathing or shortness of breath</li>
          <li> chest pain or pressure</li>
          <li> loss of speech or movement</li>
    </ul>
</❼></❻>
<❻> <td ❾="2">
 <h2>Six main recommended preventive measures</h2>
<ol>
   <li> include social distancing</li>
   <li> wearing face masks in public</li>
   <li> hand washing</li>
   <li> covering one's mouth when sneezing or coughing</li>
   <li> disinfecting surfaces</li>
   <li> monitoring and self-isolation for people exposed or symptomatic</li>
</ol>
 </❼></❻>
</table>
<center><h3>For more information: <❿ href="https://www.health.lk"> Covid Prevention Task Force
    </❿> </h3></center>
<body>
</html>
```

**உரு 2: HTML ஆதாரமூலம்**

SNA Education Campus

[பக். 14 ஐப் பார்க்க

Scanned by CamScanner

**5.** அதிக சதங்களைப் பெற்றுக்கொண்ட ரெஸ்ட் கிறிக்கெற்று ஆட்டக்காரர்களின் சில புள்ளிவிபரங்களைக் கீழேயுள்ள விரிதாள் பகுதி காட்டுகின்றது:

| | A | B | C | D | E | F | G | H | I | J | K |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **Most Centuries (100s) Scored by Cricket Players** | | | | | | | | | | |
| 2 | Player | Span | Matches | Innings | Not Outs | Runs | Highest score | Average | Centuries (100s) | Fifties (50s) | Ducks (zeros) |
| 3 | SR Tendulkar | 1989-2013 | 200 | 329 | 33 | 15921 | 248* | | 51 | 68 | 14 |
| 4 | JH Kallis | 1995-2013 | 166 | 280 | 40 | 13289 | 224 | | 45 | 58 | 16 |
| 5 | RT Ponting | 1995-2012 | 168 | 287 | 29 | 13378 | 257 | | 41 | 62 | 17 |
| 6 | KC Sangakkara | 2000-2015 | 134 | 233 | 17 | 12400 | 319 | | 38 | 52 | 11 |
| 7 | R Dravid | 1996-2012 | 164 | 286 | 32 | 13288 | 270 | | 36 | 63 | 8 |
| 8 | Younis Khan | 2000-2017 | 118 | 213 | 19 | 10099 | 313 | | 34 | 33 | 19 |
| 9 | SM Gavaskar | 1971-1987 | 125 | 214 | 16 | 10122 | 236* | | 34 | 45 | 12 |
| 10 | BC Lara | 1990-2006 | 131 | 232 | 6 | 11953 | 400* | | 34 | 48 | 17 |
| 11 | DPMD Jayawardene | 1997-2014 | 149 | 252 | 15 | 11814 | 374 | | 34 | 50 | 15 |
| 12 | AN Cook | 2006-2018 | 161 | 291 | 16 | 12472 | 294 | | 33 | 57 | 9 |
| 13 | SR Waugh | 1985-2004 | 168 | 260 | 46 | 10927 | 200 | | 32 | 50 | 22 |
| 14 | ML Hayden | 1994-2009 | 103 | 184 | 14 | 8625 | 380 | | 30 | 29 | 14 |
| 15 | S Chanderpaul | 1994-2015 | 164 | 280 | 49 | 11867 | 203* | | 30 | 66 | 15 |
| 16 | DG Bradman | 1928-1948 | 52 | 80 | 10 | 6996 | 334 | | 29 | 13 | 7 |
| 17 | MJ Clarke | 2004-2015 | 115 | 198 | 22 | 8643 | 329* | | 28 | 27 | 9 |
| 18 | HM Amla | 2004-2019 | 124 | 215 | 16 | 9282 | 311* | | 28 | 41 | 13 |
| 19 | SPD Smith | 2010-2021 | 77 | 139 | 17 | 7540 | 239 | | 27 | 31 | 5 |
| 20 | V Kohli | 2011-2021 | 87 | 147 | 10 | 7318 | 254* | | 27 | 23 | 10 |
| 21 | GC Smith | 2002-2014 | 117 | 205 | 13 | 9265 | 277 | | 27 | 38 | 11 |
| 22 | AR Border | 1978-1994 | 156 | 265 | 44 | 11174 | 205 | | 27 | 63 | 11 |
| 23 | Source https://stats.espncricinfo.com/ci/content/records/227046.html | | | | | | | | | | |
| 24 | | | | | Highest Average | | | | | | |

(i) ஒவ்வோர் ஆட்டகாரரினதும் துடுப்பாட்டச் சராசரியை (Average) நிரல் H காட்டுகின்றது. ஆட்டக்காரர் ஒருவரின் சராசரி =*(Runs)/(Innings-Not Outs)* எனும் சூத்திரத்தைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்டுள்ளது. SR ரென்டுல்கரின் (SR Tendulkar) சராசரியைப் பெறுவதற்குக் கலம் H3 இல் நுழைக்கப்பட வேண்டிய சூத்திரத்தை எழுதுக.

(ii) கலம் H3 இல் நுழைக்கப்படும் சூத்திரம் கல வீச்சு H4:H22 இற்குப் பிரதி செய்யப்படுகின்றதெனக் கொள்க. கலம் H22 இல் காட்சிப்படுத்தப்படும் சூத்திரத்தை எழுதுக.

(iii) இச்சராசரிகளை நிரல் H இல் இரு தசம தானங்களுடன் காட்சிப்படுத்துவதற்குரிய படிமுறைகளை எழுதுக.

(iv) கூடுதலான சராசரியைக் (Highest Average) காண்பதற்குக் கலம் H24 இல் நுழைக்கப்பட வேண்டிய சூத்திரத்தை = சார்பு(கலம்*1*:கலம்*2*) எனும் வடிவத்தில் எழுதுக.

(v) விரிதாள் மென்பொருள் ஒன்றிலுள்ள தரப்பட்ட **வரைபுகளின்** (Charts) பட்டியலிலிருந்து பின்வருவனவற்றிற்கு **உகந்த வரைபு வகையை** எழுதுக.

(a) SR ரெண்டுல்கரினால் பெறப்பட்ட சதங்களின், ஐம்பதுகளின் மற்றும் பூச்சியங்களின் (ducks) எண்ணிக்கையைக் காட்டுவதற்கு
**பகுதி (a) க்கான வரைபுகளின் பட்டியல்:** {வட்ட வரைபு (Pie), கோட்டு வரைபு (Line), சிதறல் வரைபு (Scatter), பரப்பு வரைபு (Area)}

(b) அனைத்து ஆட்டக்காரர்களினாலும் பெறப்பட்ட சதங்கள், ஐம்பதுகள் மற்றும் பூச்சியங்கள் என்பவற்றை ஒரே வரைபடத்தில் காட்டுவதற்கு
**பகுதி (b) க்கான வரைபடங்களின் பட்டியல்:** {பரப்பு வரைபு (Area), வட்ட வரைபு (Pie), சலாகை வரைபு (Bar), சிதறல் வரைபு (Scatter)}

குறிப்பு :

| | | |
|---|---|---|
| Player | : | ஆட்டக்காரர் |
| Innings | : | சுற்றுகள் |
| Not Outs | : | ஆட்டமிழக்காமைகள் |
| Runs | : | ஓட்டங்கள் |
| Average | : | சராசரி |
| Centuries (100s) | : | சதங்கள் |
| Fifties | : | ஐம்பதுகள் |
| Ducks ( zeros) | : | ஓட்டமெதுவும் பெறப்படாமை (பூச்சியங்கள்) |

[பக். 15 ஐப் பார்க்க

SNA Education Campus

Scanned by CamScanner

**6.** (i) ஒரு விடுதி முகாமைத்துவ முறைமையின், முறைமை விருத்தியுடன் தொடர்புபட்ட பின்வரும் சூழ்நிலைக்காட்சியைக் கருதுக:

"*StayHere Hotel*" எனும் விடுதியின் தகவல் தொழில்நுட்பப் பிரதிப் பொது முகாமையாளரான **மாலனி**, விடுதிக்கென ஒரு புதிய கணினிமயப்படுத்திய முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவை மேற்கொண்டார். இது பிரதானமாக, ஏலவே இருந்த விடுதி முகாமைத்துவ முறைமையானது செயல்திறன் மற்றும் பாதுகாப்பு முதலிய தரநிர்ணய தேவைகளை பூர்த்தி செய்வதில் கொண்டிருந்த குறைபாடுகள் காரணமாகவாகும். மாலனி இதற்கென **நிமால்** மற்றும் **அன்வர்** ஆகிய இரு செய்நிரலர்களை (programmers) முறையே அறை ஒதுக்குதல் (Room reservation) மற்றும் கையிருப்பு முகாமைத்துவம் (Inventory Management) ஆகிய கூறுகளை விருத்தி (develop) செய்வதற்கு நியமித்தார். இந்த இரு கூறுகளும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அவை ஒன்றிணைக்கப்பட்டன. இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட முறைமையின் நடப்புப் பதிப்பைச் சோதிப்பதற்கு சோதிப்பு அணியினரின் உறுப்பினரான **திருஷ்ணாவிடம்** ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னராக முறைமைக்கு மேலும் பல புதிய கூறுகள் சேர்க்கப்பட்டன. புதிய விடுதி முறைமை பூர்த்தி செய்யப்பட்டதும், சோதிப்பு அணியினரின் தலைவரான **பிரதீபா**, விடுதி முகாமைத்துவ முறைமையின் இறுதிப் பயனர்களான (end-users) விடுதி ஊழியர்களுடன் ஒரு சோதிப்பு அமர்வினை ஏற்பாடு செய்தார். இந்த அமர்வின்போது இறுதிப் பயனர்களில் பலரும் புதிய முறைமையின் தொழிற்பாடுகளுடன் பரிச்சயமாவதற்குப் பயிற்சி அமர்வுகளை ஏற்பாடு செய்யுமாறு வேண்டிக்கொண்டனர். எனவே, இரண்டு முறைமைகளையும் ஒன்றாகச் செயற்படுத்துவது சிறந்தது என்றும், அனைத்து இறுதிப் பயனர்களும் முறையாகப் பயிற்றப்பட்டதன் பின்னரே பழைய முறைமையை நிறுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(a) கிருஷ்ணாவினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை வகை எது?

(b) விடுதி ஊழியர்களினால் எந்த வகைச் சோதனை மேற்கொள்ளப்பட்டது?

(c) புதிய விடுதி முகாமைத்துவ முறைமையின் அலகுச் சோதனையை (unit testing) மேற்கொண்டவர் யார்?

(d) புதிய முறைமையை விருத்தி செய்வதற்கு விருத்தி அணியினர் ஊடாட்ட விருத்தி மாதிரியத்தைப் (iterative-incremental model) பயன்படுத்தினர். இந்தத் தீர்மானத்திற்கான நியாயப்படுத்தலை **ஒரு** காரணத்துடன் கூறுக.

(e) மேற்படி விடுதி முகாமைத்துவ முறைமைக்குப் பயன்படுத்தப்பட்ட நிறுவல் அணுகுமுறை (deployment approach) யாது?

(ii) நிமால் தனது மகனிற்குப் பணம் அனுப்புவதற்காக ஒரு நிகழ்நிலை (online) வங்கி முறைமையினுள் உள்நுழைகை (logged) செய்தார். நிமால், தனது மகனின் வங்கிக் கணக்கிலக்கத்தையும், மாற்றம் செய்யப்பட வேண்டிய தொகையையும் நுழைவு செய்தார். இப்பணப்பரிமாற்றத்தை அங்கீகரிப்பதற்கு முறைமையானது தனிநபர் அடையாள இலக்கத்தை (PIN) கோரியது. PIN ஐ வாய்ப்புப் பார்த்ததன் பின்னர், முறைமையானது அனைத்து பணப் பரிமாற்ற விவரங்களையும் காட்சிப்படுத்தி நிமாலின் இறுதி அங்கீகரிப்பை ("OK") பெற்றுக்கொண்டது. பரிமாற்றத்தின் வெற்றிகரமான பூர்த்தியின் பின்னர் நிமால் ஒரு இலத்திரனியல் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொண்டார்.

மேற்குறித்த சூழ்நிலைக்காட்சியின் **இரண்டு** உள்ளீடுகள், **இரண்டு** முறைவழியாக்கங்கள் மற்றும் **இரண்டு** வெளியீடுகளை எழுதுக.


SNA Education Campus

[பக். 16 ஐப் பார்க்க

Scanned by CamScanner

**7.** (i) ஒரு கணினிச் செய்நிரலில் உள்ள மாறிகளுக்கும் (variables) மாறிலிகளுக்கும் (constants) இடையிலான ஒரு ஒற்றுமையையும் ஒரு வேறுபாட்டையும் எழுதுக.

(ii) மூன்று பாடங்களின் புள்ளிகள் M1, M2, M3 உள்ளீடுகளாகத் தரப்படும்போது சராசரிப் புள்ளியைக் (avg) கணிப்பதற்கும் தரங்களைக் காட்சிப்படுத்துவதற்கும் பின்வரும் பாய்ச்சற் கோட்டுப்படம் வரையப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணைக்கேற்பத் தரங்கள் தீர்மானிக்கப்படும்.




**அட்டவணை**

| சராசரிப் புள்ளிகள் (avg) | தரம் |
|---|---|
| 80 இற்குக் கூடியது அல்லது சமமானது | A |
| 80 இற்குக் குறைந்ததும் 65 இற்குக் கூடியதும் அல்லது சமமானதும் ஆகும். | B |
| 65 இற்குக் குறைந்ததும் 50 இற்குக் கூடியதும் அல்லது சமமானதும் ஆகும். | C |
| வேறு விதமெனின் | தரம் இல்லை |

மேலேயுள்ள பாய்ச்சற் கோட்டுப்படத்தைத் திருத்தமாக உங்களுடைய விடைத்தாளில் பிரதிசெய்து, ? இனால் காட்டப்படும் வெற்றிடங்களைத் தரப்பட்ட சூழ்நிலைக்கேற்ப நிரப்புக.

(iii) எல்லா இடங்களிலும் பூச்சியங்களைக் (zeros) கொண்ட பின்வரும் அணி (array) **A** ஐக் கருதுக:

| A[0] | A[1] | A[2] | A[3] | A[4] |
|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 0 | 0 |

மேற்குறித்த அணி **A** இல் பின்வரும் போலிக்குறிமுறையை நிறைவேற்றிய பின்னர் Ⓟ, Ⓠ, Ⓡ, Ⓢ, Ⓣ ஆகியவற்றின் பெறுமானங்கள் யாவை?

```
BEGIN
    value = 2
    k = 0
    REPEAT
            A[k] = value
            value = value * 5
            k = k + 1
    UNTIL k < 5
END
```

| A[0] | A[1] | A[2] | A[3] | A[4] |
|---|---|---|---|---|
| Ⓟ | Ⓠ | Ⓡ | Ⓢ | Ⓣ |

* * *

SNA Education Campus

Scanned by CamScanner